தமிழ்நாடு அரசு

**<u>சுருக்கம்</u>**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி- பட்டியல் இனம்/பழங்குடி/கிருத்துவ பட்டியல் இன மாணவ,மாணவியருக்கு பரிசுத்தொகை வழங்குதல்- மாநில /மாவட்ட அளவிலான பரிசுகள் உயர்த்தி வழங்குதல்- ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை

அரசாணை(நிலை) எண்.38,

நாள் 11.5.1998

<u>படிக்கப்பட்டவை:</u>

1. அரசாணை(நிலை) எண்,1959.உள்துறை, நாள் 12.6..61.
2. அரசாணை(நிலை) எண்.512.உள்துறை, நாள் 15.2.65.
3. அரசாணை(நிலை) எண்.941, சமூக நலத்துறை, நாள் 18.12..69
4. அரசாணை(நிலை)எண்374. சமூக நலத்துறை, நாள் 29.4.70
5. அரசாணை(நிலை)எண்.383, சமூக நலத்துறை, நாள் 10.5.76
6. அரசாணை(நிலை) எண்.1550, சமூக நலத்துறை, நாள் 7.9.79
7. அரசாணை(நிலை) எண்.621,,சமூக நலத்துறை, நாள் 27.2.86.
8. அரசரணை(நிலை) எண்,382, சமூக நலத்துறை, நாள் 9.3.88.
9. அரசாணை(நிலை) எண்.1245, ஆதிந நாள் 13.7.89.

---

<u>ஆணை:</u>

மாநில அளவில்/மாவட்ட அளவில் 8,10 மற்றும் +2 வகுப்பு பொதுத்தேர்வுகளில் முதன்மையாக வரும் பட்டியல் இனம்/பழங்குடியின மாணவர்களுக்கு கீழ் குறிப்பிடப்படும் அளவிகளில் தற்போது பரிசுத்தொகைகள் வழங்கப்படுகின்றன:-

அ) +2 வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதன்மையாக வரும் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கு தலா ரூ.5000/-.

ஆ) 10ம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதன்மையாக வரும் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கு தலா ரூ.3000/-.

இ) 8ம் வகுப்புத் தேர்வில் மாவட்ட அளவில் முதன்மையாக வரும் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கு முதல் பரிசு தலா ரூ.500/- இரண்டாம் பரிசு தலா ரூ.300/-.

2. +2, 10, மற்றும் 8ம் வகுப்புகளில் பயிலும் பட்டியல் இனம்/பழங்குடியினர் /கிருத்துவ பட்டியல் இன மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் ஏற்கனவே உள்ள பரிசுகளை உயர்த்தியும், சில புதிய பரிசுகளை அறிமுகப்படுத்தியும் கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:-

| வகுப்பு | தற்போதுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை | மாற்றியமைக்கப் பட்ட பயனாளிகள் எண்ணிக்கை | தற்போது வழங்கப்படும் பரிசுத் தொகை (ஒருவர்க்கு) | உயர்த்தப்பட்ட பரிசுத் தொகை (ஒருவர்க்கு) |
|---|---|---|---|---|

<u>1, மாநில அளவிலான பரிசு</u>

| | | | | |
|---|---|---|---|---|
| அ) +2 தேர்வு | ஒரு மாணவன் + ஒரு மாணவி | பட்டியல் இனம்/ பழங்குடி /கிருத்துவ பட்டியல் இனம் ஒவ்வொரு இனத்திலும் ஒரு மாணவன் ஒரு மாணவி | ரூ.5000/- | ரூ.25,000/- |
| ஆ) 10ம் வகுப்பு | ஒரு மாணவன் + ஒரு மாணவி | பட்டியல் இனம் /பழங்குடி/ கிருத்துவ பட்டியல் இனம் ஒவ்வொரு இனத்திலும் ஒரு மாணவன் ஒரு மாணவி | ரூ.3000/- | ரூ.10,000/- |
| 2) அ) +2 பாடங்கள் ஒவ்வொன்றிலும் மாநில முதன்மை (சற்றொப்ப 22 பாடங்கள்) | -- | பட்டியல் இனம்/ பழங்குடி /கிருத்துவ பட்டியல் இனம் ஒவ்வொரு இனத்திலும் ஒவ்வொருவர் | -- | ரூ.2000/- |
| ஆ) 10ம் வகுப்பு பாடங்கள் ஒவ்வொன்றிலும் மாநில முதன்மை ஐந்து பாடங்கள் | -- | பட்டியல் இனம்/ பழங்குடி/ கிருத்தவ பட்டியல் இனம் ஒவ்வொரு இனத்திலும் ஒவ்வொருவர் | -- | ரூ.1000/- |

3) மாவட்ட அளவிலான பரிசு எட்டாவது வகுப்புத் தேர்வு:-

| | | | | |
|---|---|---|---|---|
| அ) முதல் பரிசு | ஒரு மாணவன் + ஒரு மாணவி | பட்டியல் இனம்/ பழங்குடி/ கிருத்துவ பட்டியல் இனம் ஒவ்வொரு இனத்திலும் ஒரு மாணவர் ஒரு மாணவி | ரூ.500/- | ரூ.1000/- |
| ஆ) இரண்டாம் பரிசு | ஒரு மாணவன் +ஒரு மாணவி | பட்டியல் இனம்/ பழங்குடி/ கிருத்துவ பட்டியல் இனம் ஒவ்வொரு இனத்திலும் ஒரு மாணவன் + ஒரு மாணவி | ரூ.300/- | ரூ.500/- |
| இ) மூன்றாம் பரிசு | -- | பட்டியல் இனம்/ பழங்குடி/ கிருத்துவ பட்டியல் இனம் ஒவ்வொரு இனத்திலும் ஒரு மாணவன் + ஒரு மாணவி | -- | ரூ.200/- |

3) மேலே குறிப்பிடப்பட்ட பரிசுத் தொகைகளை ஒப்பளிப்பு செய்யும் போது பட்டியல் இனம்/பழங்குடி/கிருத்துவ பட்டியல் இனம் ஆகிய ஒவ்வொரு இனத்திலும் மாற்றியமைக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மிகாமல் பயனாளிகள் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்,

4) இச்செலவினம் "2225.பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் 01. பட்டியல் சாதியினர் நலன்- 277- கல்வி - I திட்டத்தில் சேராதது AG - ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளுக்குப் பரிசுகள் வழங்குதல் 59 - பரிசுகளும் வெகுமதிகளும்".

(த,தொ.கு.2225 01 277 AG 5904)

5) இத்திட்டத்திற்காகும் கூடுதல் செலவினத்தை 199-99ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் சேர்த்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் முன்மொழிய வேண்டும்.

/ஆளுநரின் ஆணைப்படி/

இரா.கிருத்துதாசு காந்தி,

அரசு செயலாளர்.

பெறுநர்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை.5

மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை18/சென்னை6/சென்னை35/சென்னை.9

சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை.5

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்

அனைத்து கருவூல அலுவலர்கள்,

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை,.6

கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை.6

பிற்பட்டோர் (ம) மிகவும் பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர், சென்னை-5

அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள்

<u>நகல்</u>

கல்வித்துறை, சென்னை.9

நிதித்துறை, சென்னை.9